தேதி - 03.04.2025

அமர்வு வழக்கு எண்.371/2019
(எதிரி ஆஜர்)

எ.சா.1 – திரு. அலெக்ஸ்பாண்டியன்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை

நான் தண்ணிகேன் வியாபாரம் செய்து வருகிறேன். எதிரியின் மனைவி சாந்தா டீச்சரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி அவருடைய கணவர். எதிரி என்ன தொழில் பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. சாந்தா டீச்சரை எனக்கு சுமார் ஆறு வருடங்களாக எனக்கு தெரியும். முதல்விசாரணையில் சொன்னது போல் 15.09.2018 ம் தேதியன்று ஆஜர் எதிரியும், அவருடைய மனைவி சாந்தா டீச்சரும் ஒரே வீட்டில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். முதல்விசாரணையில் சொன்ன விபரங்களை பொறுத்து காவல்துறையில் ஏதேனும் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் இல்லை. முதல்விசாரணையில் சொன்ன விபரத்தை நான் புகாராக காவல்துறையினரிடம் கொடுக்கவில்லை. எதிரிக்கு சிவகாசி பக்கம் சொந்த ஊர் ஆகும். சாந்தா டீச்சரும், அவருடைய கணவரும் நான் சொன்ன தேதிக்கு முன்பாகவே தனித்தனியாக பிரிந்து வாழ்கிறார்கள் என்றும், சாந்தா டீச்சர் எதிரியின் மீது விவாகரத்து வழக்கு உசிலம்பட்டியில் H.M.O.P.No.227/2018 ல் நாள் 13.08.2018 ல் தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே நான் சொன்னது போல் சாந்தா டீச்சரும், எதிரியும் ஒரே வீட்டில் குடியிருந்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. எதிரி பணம் கொடுத்து இந்த வழக்கில் இருந்து தன்னைவிடுவிக்க வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்க கேட்டுக் கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

தேதி - 03.04.2025

அமர்வு வழக்கு எண்.371/2019
எதிரி ஆஜர்

எ.சா.2 – திரு. அந்தோணிராஜ்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை

ஆஜர் எதிரியை சாந்தா டீச்சரை திருமணம் செய்த காலத்தில் இருந்து எனக்கு தெரியும். எதிரி என்ன தொழில் பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணையில் சொன்னது போல் 15.09.2018 ம் தேதி ஆஜர் எதிரியும், சாந்தா டீச்சரும் ஒரே வீட்டில் தான் குடியிருந்து வந்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். எதிரியை கைது செய்த விசயமாக நான் காவல்துறைக்கு நான் எந்த தகவலும் சொல்லவில்லை. எனக்கு தெரிந்த விசயம் சம்பந்தமாக காவல்துறை மற்றும் அரசுத்துறையிலும் எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சாந்தா டீச்சரும், அவருடைய கணவரும் நான் சொன்ன தேதிக்கு முன்பாகவே தனித்தனியாக பிரிந்து வாழ்கிறார்கள் என்றும், சாந்தா டீச்சர் எதிரியின் மீது விவாகரத்து வழக்கு உசிலம்பட்டியில் H.M.O.P.No.227/2018 ல் நாள் 13.08.2018 ல் தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே நான் சொன்னது போல் சாந்தா டீச்சரும், எதிரியும் ஒரே வீட்டில் குடியிருந்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றும், எதிரி பணம் கொடுத்து இந்த வழக்கில் இருந்து தன்னை விடுவிக்க வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்க கேட்டுக் கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.